volunteering australia

தகவல் ஏடு - Tamil

# சுயவிருப்பத் தொண்டின் அர்த்தங்கள் மற்றும் கொள்கைகள்

## (Definitions and Principles of Volunteering)

### சம்பிரதாயப்படியான சுயவிருப்பத் தொண்டின் அர்த்தம் (Definition of formal volunteering)

**இலாப நோக்கற்ற அமைப்புக்கள் அல்லது திட்டங்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையே முறைப்படியான சுயவிருப்பத் தொண்டு என்பதாகும், மற்றும் இது கீழ்வரும் நோக்கங்களுக்கென மேற்கொள்ளப்படுகின்றது:**

- சமூகத்தினருக்கும், சுயவிருப்புத்தொண்டருக்கும் நன்மை பயக்க;
- தொண்டரது சுயவிருப்பப்படியும், எந்த விதமான வலுக்கட்டாயம் இன்றியும் ஆற்றும் பணி;
- பணச் சம்பளத்திற்காக செய்யப்படுவதல்ல; மற்றும்
- குறிப்பிட்டுச் சொல்லப்பட்ட சுயவிருப்புத்தொண்டருக்கான இடங்களில் மட்டும்.

**சுயவிருப்பத்தொண்டின் அடிப்படைக் கொள்கைகள்**

- சமூகத்தினருக்கும், சுயவிருப்புத்தொண்டருக்கும் இத்தொண்டு நன்மை பயக்கும்;
- சுயவிருப்புத்தொண்டிற்கு சம்பளம் இல்லை;
- சுயவிருப்பத்தொண்டு ஆற்றுவது ஒருவரது சொந்தத் தெரிவாகும;
- ஓய்வூதியங்கள் அல்லது அரசாங்கப் படிகள் போன்றவற்றைப் பெறுவதற்கென மேற்கொள்ளப்படும் கட்டாய நடவடிக்கையல்ல இத்தொண்டு;
- சுயவிருப்பத்தொண்டென்பது தமது சமூகத்தினருக்கான நடவடிக்கைகளில் பிரசைகள் பங்கேற்கவல்ல சட்டத்திற்குட்பட்ட நடவடிக்கையாகும்;
- மனித, சுற்றுப்புறச்சூழல் மற்றும் சமுதாயம் சார்ந்த தேவைகளை நிறைவேற்ற தனிமனிதருக்கு இத் தொண்டு வாய்ப்பளிக்கிறது;
- இலாப நோக்கற்ற துறைகளில் மட்டுமே ஆற்றப்படும் நடவடிக்கையே சுயவிருப்பத்தொண்டாகும;
- சுயவிருப்பத்தொண்டு சம்பளம் தரப்படும் வேலைக்குப் பதிலீடல்ல;
- சம்பளம் பெறும் வேலையாட்களை சுயவிருப்பத்தொண்டர்கள் பதிலீடு செய்வதில்லை, மற்றும் சம்பளம் பெறுவோரது வேலைக்கு சுயவிருப்பத் தொண்டர்கள் எவ்விதமான அச்சுறுத்தலையும் ஏற்படுத்துவதில்லை;
- மற்றவரது உரிமைகள், கௌரவம் மற்றும் கலாச்சாரத்தினை சுயவிருப்பத்தொண்டு மதிக்கின்றது; மற்றும
- மனித உரிமைகள் மற்றும் சமத்துவத்தினை சுயவிருப்பத்தொண்டு ஊக்குவிக்கின்றது.

Volunteering Australia
Suite 2, Level 3
11 Queens Road
Melbourne Victoria 3004
Australia

தொலைபேசி: +61 (0)3 9820 4100
தொலைநகல்: +61 (0)3 9820 1206
மின்னஞ்சல்: volaus@volunteeringaustralia.org
இணையதளம்: www.volunteeringaustralia.org

ARBN: 062 806 464
© 2009 Volunteering Australia